# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2384/30 - 2024 මැයි මස 17 වැනි සිකුරාදා - 2024.05.17

*2384/30 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டம்

*2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 09 ஆவது பிரிவுக்கு அமைவாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகிய நான், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அஸ்வெசும நலன்புரி நன்மை வழங்கல் நிகழ்ச்சித்திட்டமானது 2024, யூன் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து செயற்படுத்தப்படும் என பிரகடனம் செய்கிறேன்.*

*2023, ஏப்பிறல் 21 ஆந் திகதிய 2328/13 ஆம் இலக்க மற்றும் 2024, பெப்புருவரி 19 ஆந் திகதிய 2372/03 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்ட அறிவிப்பை இத்தால் இரத்துச் செய்கிறேன்.*

*ரணில் விக்ரமசிங்க,*
*நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும்*
*தேசிய கொள்கைகள் அமைச்சர்.*

*2024, மே மாதம் 16 ஆந் திகதி.*

**அஸ்வெசும நலன்புரி நன்மை கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம்**

**I ஆவது அட்டவணை**

*1 ஆவது நிரல்*

**2024, யூன் மாதத்துக்கு மட்டும் உரித்தான சிறப்பு நலன்புரி நன்மைக் கொடுப்பனவு**

| | *நலன்புரிப் பலன்களைப் பெறுகின்ற சமூகப் பிரிவினர்* | *நலன்புரி பயனாளிகள்/ குடும்பங்களின் எண்ணிக்கை* | *2024, யூன் மாதத்துக்கு மட்டும் உரித்தான சிறப்பு நலன்புரி நன்மைக் கொடுப்பனவு (ரூபா) ** |
|---|---|---|---|
| I. | *நிலையற்றவர்கள்* | *400,000* | *30,000* |
| II. | *ஆபத்துக்கு உட்பட்டவர்கள்* | *400,000* | *15,000* |
| III. | *வறியவர்கள்* | *800,000* | *8,500* |
| IV. | *மிகவும் வறியவர்கள்* | *400,000* | *15,000* |

* *குறிப்பு - குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை 02 அல்லது 02க்கு குறைவாக இருந்தால், பயனாளிகளுக்கு உரிய கொடுப்பனவில் அரைவாசி மாத்திரமே வழங்கப்படும்.*


1A - PG 6732 — 379 (2024/05)



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2 ஆவது நிரல்**

**2024, யூலை முதல் அஸ்வசும நலன்புரி நன்மை உதவி வழங்கல் திட்டம்**

| | நலன்புரிப் பலன்களைப் பெறுகின்ற சமூகப் பிரிவினர் | கொடுப்பனவு செலுத்தும் கால வரை | நலன்புரி பயனாளிகள்/ குடும்பங்களின் எண்ணிக்கை* | குடும்ப அலகுக்கு முன்மொழியப்பட்ட மாதாந்த நலன்புரி உதவித்தொகை (ரூபா) ** |
|---|---|---|---|---|
| I. | நிலையற்ற/ஆபத்துக்கு உட்பட்ட | 2024.07.01 இருந்து 2024.12.31 வரை | 960,000 | 5,000 |
| II. | வறியவர்கள் | 2024.07.01 இருந்து 2026.06.30 வரை | 960,000 | 8,500 |
| III. | மிகவும் வறியவர்கள் | 2024.07.01 இருந்து 2026.06.30 வரை | 480,000 | 15,000 |

* குறிப்பு - இந்த எண்ணிக்கையின் பெறுமதி பயனாளியின் குடும்பக் கணக்கீட்டினைப் பொறுத்து சற்று மாறுபடலாம்.

** குறிப்பு - குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை 02 அல்லது 02 இற்கு குறைவாக இருந்தால், பயனாளிகளுக்கு உரிய கொடுப்பனவில் அரைவாசி மாத்திரமே வழங்கப்படும்.

**II ஆவது அட்டவணை**

**மாற்றுத்திறனாளிகள், கண்டறியப்படாத சிறுநீரக நோயாளிகள், முதியோர் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள்**

| | நலன்புரிப் உதவிகளைப் பெறுகின்ற சமூகப் பிரிவினர் | நலன்புரி நன்மைகளைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கை | மாதாந்த நலன்புரி உதவித்தொகை (ரூபா.) |
|---|---|---|---|
| (i) | மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி பெறுகின்றவர்கள் | 410,000 | 7,500 |
| (ii) | சிறுநீரக உதவி பெறுகின்றவர்கள் | 50,000 | 7,500 |
| (iii) | முதியோருக்கான உதவி பெறுகின்றவர்கள் | 820,000 | 3,000 |

** குறிப்பு - அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் 2024.07.01 முதல் 2025.06.30 வரை செலுத்தப்பட வேண்டும். நலன்புரி நன்மைகள் பதிவேட்டின் மூலம் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளுக்கு 2024.07.01 முதல் நலன்புரி உதவித் தொகைகள் வழங்கப்பட வேண்டும்.

2023, ஏப்பிறல் 21 ஆந் திகதிய 2328/13 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது, ஆனால் அதன் அட்டவணை I தொடர்பாக, நலன்புரி நன்மைகளுக்காக ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மேலும் பல்வேறு காரணங்களால் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படும் பயனாளிகள் மற்றும் மேன்முறையீட்டினைச் சமர்ப்பித்து தற்போது பரிசீலனைக்குட்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு அவர்களின் தகுதிக்கேற்ப 2023.12.31 வரை குறிப்பிட்ட கொடுப்பனவைச் செலுத்த வேண்டும்.

EOG 05-0133

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.